**SPIRITUALITY and LEADERSHIP (ஆன்மீக தலைமைத்துவம், தலைமைத்துவ ஆன்மீகம்)**

**https://youtu.be/Q986WxurC3E?si=SupYt-0R9gX6tIhV - Holy Spirit Hymn- உன்னையே நம்பி வந்தேன்.....உயிர் தரும் ஆவியே....**

https://in.docworkspace.com/d/sIGGuodA_qteowAY -POWERPOINT PRESENTATION OR

https://youtu.be/1E_WHy0U4nE - YOUTUBE PRESENTATION

**Sprituality** involves the recognition of a feeling or sense or belief that there is something greater than myself, something more to being human than sensory experience, and that the greater whole of which we are part is cosmic or divine in nature.

*Spirituality does two things for you. One you are forced to become more selfless, second your trust in providence.*

கடவுளின் வாக்குறுதிகளை நம்பி செயலில் இறங்குவதும்.....(**உன்னோடு நானிருப்பேன்.....)**

பிறகு கடவுள் மீதும், வாக்குறுதி மீதும் சந்தேகம் வருவதும்....**(நானே உன் கடவுள் முதலும் முடிவுமாய்...)**

தன் தகுதியற்ற நிலையை கடவுளுக்கு உணர்த்த முயற்சி செய்வதும்....**(நான் நானாகவே வந்திருக்கிறேன்....)**

கேள்விகள் கேட்பதும்....**(என் தலைவா என்னை ஏன் அழைத்தாய்....)**

கேள்வி கேட்டு கடவுளிடமிருந்து தெளிவு பெறுவதும்....**(உன் மடியில் சாய்ந்திட வருகின்றேன்...)**

கடவுள் யாரென்று புரிந்துகொள்வதும்....**(யோசனையில் பெரியவரே...)**

சவால்களை கண்டு பயந்தவர்கள் கடவுளின் வல்லமையால் துணிவோடு செயல்படுவதும்....**(உனக்காக இனி வாழ முடிவெடுத்தேன், ஆண்டவரே என் ஆற்றலாய் உள்ளவரே...)**

சொல்பேச்சு கேளாத மக்கள் மீது கோபம் கொள்வதும்....(

இவர்களின் செயல்களால் விரக்தியடைவதும்....

கடவுளிடம் முறையிடுவதும், புலம்புவதும்....

போதுமடா சாமி என்று தப்பிக்க நினைப்பதும்.....

பிடிவாதம் கொண்ட கடவுள் தன் மக்களை வழிநடத்த என்னை விடுவதாக இல்லை என்பதை அறிந்துகொள்வதும்....**(எனை அனுப்பும் தெய்வமே...)**

வெறுப்படைந்து சோர்ந்து போவதும்....**(இன்னும் எத்தனை தூரம் பயணம் செய்யனும் நாதா...)**

பிடிவாதமும் திமிரும் திருந்தாத மனநிலையும் கொண்டவர்களால் உற்சாகமிழப்பதும்....(

ஒலிவு மறைவு இல்லாமல் சொல்ல வேண்டியதை சொல்வதும்....

கோபம் கொள்கின்ற கடவுளை சாந்தமாக்குவதும்

மக்களுக்காக பரிந்து பேசுவதும்...மீண்டும் முறையிடுவதும்....(

மீண்டும் கடவுளை மட்டுமே நம்பி வாழ்வதும்....**(உயிர்த்த என் இறைவன்...)**

கடவுளை நம்பி வாழ வேண்டும் என்று அறிவுரையும் ஆசியுரையும் வழங்குவதும்....(

கடவுள் வழங்கும் மீட்பை அனைவரும் அனுபவிக்க செய்வதும்....

எதற்காக இவையெல்லாம்....ஏன் இவர்களெல்லாம்..... எப்படி இவர்களால் செய்ய முடிந்தது....தகுதியற்றவர்கள் எப்படி தகுதியுள்ள தலைவர்கள் ஆனார்கள்......(ஆன்மிகத்தால் தலைவர் ஆனவர்கள், தலைமைத்துவம் ஆன்மிகத்தால் வந்தது என்று உணர்ந்தவர்கள்)

ஆன்மிகம் என்பது (உண்மையான ஆன்மிகம்தான் தலைமைத்துவம் - உண்மையான


தலைமைத்துவம் இருக்கும் இடத்தில் ஆன்மிகம் உண்டு) – ஆன்மிகவாதிகள் தலைமைத்துவத்தில் இருப்பதற்கும், இயேசுவும் (மனிதனாக வாழ்ந்தபோது அப்போஸ்தலர்களுக்கு இருந்த தலைமைத்துவத்திற்கும்) அவருக்கு பின் (பெந்தகோஸ்தேவுக்கு பிறகு) அவருடைய சீடர்களும் தலைமைத்துவத்தில் இருப்பதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு.

மதம் ஆன்மீகம் அல்ல, விவிலியத்தில் இருப்பது அனைத்தும் ஆன்மீகம் இருந்தாலும் அதை வாழ்வதில்தான் ஆன்மீகம் இருக்கிறது, ஆன்மிகம் என்பது, தினமும் செபம் செய்து (கடமைக்காக, கட்டமைப்புக்காக, மற்றவர்களுக்கு நல்ல உதாரணம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, மற்றவர்கள் என்னைப்பற்றி பேச வேண்டும் என்பதற்காக), தயாரிப்பு இல்லாமல் திருப்பலியில் ஒரு சடங்கில் பங்கெடுப்பது போல பங்கெடுப்பது, தவறாது குழம செபத்திற்கு வந்துவிட்டாலோ, தாமதம் இல்லாமல் வந்து பங்கெடுத்துவிட்டாலே அது ஆன்மீகம் ஆகாது, அதேபோல நான் தாமதாக வருவதால் யாருக்கு என்ன பிரச்சனை என்று விதண்டாவாதம் பேசுவதோ ஆன்மீகம் ஆகாது, இறைவார்த்தைகளை பயன்படுத்திவிட்டால் அவன்

ஆன்மீகவாதி ஆகமுடியாது, கடவுள் நம்பிக்கை மட்டும் ஆன்மீகம் ஆகாது. எந்நேரமும் இறைவனின் நாமத்தை உச்சரித்துக்கொண்டும், பலர் பார்க்கும்படி கோயிலுக்கு நன்கொடை கொடுப்பதும், எல்லோர் முன்னிலையிலும் என் பெயர் வாசிக்கப்படவேண்டும் என்பதும், கையில் கயிறு கட்டுவதும், கால் நடையாக நடந்து செல்வதும், மாலை போடுவதும், வேண்டுதல் வைப்பதும், வருடத்திற்கு ஒருமுறை பாவசங்கிர்த்தனம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை ஆனால் வேளாங்கண்ணிக்கு நடந்து செல்வதும், செபத்தில் மூழ்கிப்போவதும், பக்தி பரவசத்தோடு இருப்பதும், பக்தியில் இருப்பதுபோல நடிப்பதும், துறவற வாழ்வில் அழைப்பை பெற்றுக்கொள்வதும், வெள்ளிவிழா பவள விழா கொண்டாடுவதும், 70 மற்றும் 80 வருடம் அல்லது அதை தாண்டி வாழ்வதும், பல வருடங்களாக தலைமைப்பொறுப்பில் இருப்பதும், (திருவிழாக்களை அருவருக்கிறேன்) அல்ல ஆன்மிகம்.

**அன்பே சிவம் (பகுதி) – கண்ணீர் வடிக்கும் குணம் கடவுள்**

**https://youtu.be/qjtue2vEul8?si=6i_u-7UTZFBTpRGj**




Pray with purpose. Prostrate every day. Be slow to anger. Give the benefit of the doubt. Seek wisdom and grace. Dismiss suspicion and replace it with trust. Speak softly. Place others' needs above your own. Reach out to someone, just because. Give up something that's hard to let go. Be gentle. Apologize for a wrong (even if you were right). Repent with tears. Confess, and confess again. Try to understand. Welcome a stranger. Put down the phone. Pick up the Bible. Forgive someone who hurt you, as hard as it may be. Stop looking for fault. Give thanks. Listen more. Esteem others better than yourself. Give alms. Have mercy. Meditate on His immeasurable love for us. Reflect that love to everyone you meet. +++



ஒருவனிடம் தர்ம சிந்தனை இருக்கும் பொழுது, அந்த தர்மமே அவன் எதிர்காலத்தைப் பார்த்துக் கொள்ளும். ஏன் என்றால், ஒரு மனிதன் என்ன பிரந்தனை செய்தாலும் எத்தனை மந்திரங்கள் உரு ஏற்றினாலும், எத்தனை அபிஷேகங்கள், யாகங்கள் செய்தாலும் கூட அவனிடம் உதவும் குணம் இல்லை என்றால், இறை அருளைப்பெற முடியாது. ஒரு மனிதன் இறை அருளைப் பெறவேண்டுமென்றால், ஏன் இறை நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட பரவாயில்லை, தர்ம குணமும் பிறருக்கு உதவும் குணமும் இருந்துவிட்டால் போதும். இவன் இறையை தேடவேண்டியதில்லை. இறை இவனைத் தேடி வந்துவிடும். எவன் அதிக அளவு தர்மம் செய்கிறானோ, அவனிடம் இறையே வந்து கையேந்தும்.

- அகத்தியப்பெருமான் அருள் வாக்கு!


Buddha.ofcl
நீங்கள் உங்களை நேசிக்கத்
தொடங்கும் போது எல்லாம் மாறும்




# தமிழ்த் துளி!

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
'அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்' எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
'அனுபவம் என்பதே நான்தான்' என்றான்!

- கண்ணதாசன்


LikeMyStatus.in
ஆன்மீகம்
நம்மை நாம் உணர்தல்
தெய்வீகம்
பிறர் யார் என நாம் உணர்தல்
இரவு வணக்கம்




- மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல்
- அடுத்திருப்பவருக்கு நல்லது செய்யாவிட்டாலும் கெடுதல் செய்யாமல்
- என்னுடைய நிறை குறைகளை நான் அறிந்துகொண்டு
- மற்றவர்களுக்கும் என்னைப்போலவே நிறை குறைகள் உண்டு என்பதை உணர்ந்து கொண்டு
- யாரையும் தீர்ப்பிடாமல், குற்றவாளியாக்காமல்
- எனக்கு எல்லாம் தெரிவதில்லை
- நமக்கும் மேலே ஒருவனடா அவன் நாளும் தெரிந்தத தலைவனடா தினம் நாடகம் ஆடும் கலைஞனடா என்பதையும் அறிந்து
- என் விருப்பப்படி எதுவும் நடப்பதில்லை என்பதையும் ஏற்றுக்கொண்டு

- எந்த செயல் செய்தாலும் அது அவரது திருவுளப்படிதான் நடக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டு
- வீண்பெருமை கொள்ளாமல், இது என்னால் அல்ல, கடவுளால் நிகழ்ந்தது என்று சொல்வது
- மனசாட்சிக்கு பயந்து வாழ்வது
- கடவுள் பார்க்கிறார் என்ற மனநிலையில் வாழ்வது
- நான்கு வகை மனிதர்களில் 1 மற்றும் 3 மனித வகைகளில் வாழ்வது
- கடவுளை ஆத்மார்த்தமாக வணங்குவது (பல மணிநேரம் இல்லையென்றாலும் 10 நிமிடம்)
- இயேசுவே எனக்கு என்று யாருமே இல்ல....என்று பாடலுக்காக இல்லாமல் உணர்ந்து
- சொந்தமென்று சொல்லிக்கொள்ள....என்று ஏற்றக்கொண்டு
- அனைத்தும் நீயாக இருக்கிறாய் என்று கடவுளை முழுமையாக நம்பி
- என்னை உமது கருவியாய் மாற்றிடு தேவா....என்று கையளித்து
- இறைவனிடம் சரணடைந்து கடமைகளை சரிவர செய்வது

- நமக்கு ஏற்படும் நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் நாமே பொறுப்பு என்பதை உணர்வது
- அனைவரிடமும் அன்பாக பேசி, நன்மையை செய்தல்
- அனைவரையும் மரியாதையுடன் நடத்துதல்
- எதற்குமே ஆசைப்படாமல் இருத்தல்
- கடமையை செய் பலனை இந்த உலகில் எதிர்பார்க்காமல் (துண்டு எதிர்பார்க்காமல், பெருமைக்குரிய வார்த்தைகளை எதிர்பார்க்காமல்) இருப்பதுதான் ஆன்மீகம்.
- ஏற்றுக்கொள்வது, புரிந்துகொள்வது, நம்புவது ஆன்மிகம்
- மீக்கா 6:8 - இருந்தாலும் பாம்மைப்போல முன்மதியும், புறாவைப்போல கபடற்ற வாழ்வும் ஆன்மிகம்

life is all its expressions - video

மாற்கு 12:29-31 – சிறந்த ஆன்மீகம்

கடவுள் அல்லது நமக்கும் மேலே ஒரு சக்தி உண்டென்று நம்புவது

கடவுளின் வார்த்தைகளை நம்புவது

நம்பிக்கையை வாழ்வாக்குவது (கடவுளில், என்னில், மற்றவர்களில்)- இயேசுவைப்போல (லூக் 4:16-22)- இதுதான் சீடத்துவ பணி…இந்த பணியாளர்கள்தான் தலைவர்கள். இதில்தான் தலைமைத்துவம் இருக்கிறது.

நானே உன் கடவுள் முதலும் முடிவுமாய், நானே இருக்கிறேன்….